بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*
*(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*
*அவர்கள் 27.01.2017அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

சென்ற குத்பாவில் நான் தொழுகையின் முக்கியத்துவம் குறித்து கவனமூட்டியிருந்தேன். பல தனிப்பட்ட கடிதங்கள் இதன் பக்கம் கவனம் செலுத்துவதற்காக வந்தன. தமது கவனமின்மைக்காக தமது வெட்கத்தையும் வெளிப்படுத்தியிருந்தன. பல இடங்களிலிருந்து ஜமாஅத் அமைப்பின் கடிதங்களும் வந்தன. உள்ளபடியே இவ்விஷயத்தில் அசட்டையாக இருக்கிறோம் என்றும், வருங்காலத்தில் இதன் பக்கம் கவனமூட்டுவதற்கான உறுதியான சிறப்பான நிகழ்ச்சிகள் தயாரிப்பதாகவும் அவை தெரிவித்தன. மேலும் இன்ஷா அல்லாஹ் வருங்காலத்தில் முழுமையாக முயற்சி செய்வதாகவும், சோம்பல் விலகி விடும் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். அல்லாஹ் இந்த எல்லாருக்கும் அதற்கான வாய்ப்பினை வழங்குவானாக! நமது பள்ளிவாயில்கள் உண்மையில் நிரம்பியிருக்கும் காட்சியை எடுத்து வைப்பவையாக இருக்கட்டுமாக!

ஆனால், ஜமாஅத் அமைப்பு எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பணிகளின் உயரிய விளைவை உருவாக்குவதற்காக நிரந்தரத்தன்மை அவசியமாகும். ஆரம்பத்தில் நம்மில் பலர் மிகவும் ஆர்வத்துடன் பணியை ஆரம்பிக்கின்றனர். ஆனால், சிறிது காலத்திற்குப் பிறகு சோம்பல் ஆரம்பமாகத் தொடங்கி விடுகிறது. இது மனித இயல்பும் ஆகும். ஜமாஅத் மக்களிடம் சோம்பல் உருவாகுவது மிகவும் கவலைக்குரிய விஷயமாக இருந்தாலும் அது பயங்கரமான விளைவை ஒன்றும் ஏற்படுத்தி விடாது. ஆனால் அமைப்பில் சோம்பல் உருவாகுவது மிகவும் ஆபத்தானதாகும். ஜமாஅத் மக்களுக்கு கவனமூட்டக்கூடிய அமைப்பில் சோம்பல் உருவாகி விட்டால் அல்லது தமது பணியில் சுவரஸ்யம் காட்டா விட்டால் பிறகு மக்களின் சீர்திருத்தம் பிரச்சனையாகி விடுகிறது. இயல்பின் காரணமாக சோம்பல் உருவாகி விட்டால் பிறகு சீர்திருந்துவது கஷ்டமாகி விடும். எனவே, கிளை அமைப்புகளும், ஜமாஅத் அமைப்பும் தமது பணிகளை குறிப்பாக நமது பிறப்பின் நோக்கமாக ஆக்கியிருக்கிற பணிகளுக்காக எத்தகைய திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்றால், காலம் செல்லச் செல்ல சோம்பல் காட்டுவதற்குப் பதில் ஒவ்வொரு நாளும் முன்னேற்றத்தின் பக்கம் எடுத்துச் செல்வதாக அவை இருக்க வேண்டும். நமது இபாதத்துகளின் முன்னேற்றமே நமக்கு வெற்றியைத் தருபவையாக இருக்கும். எனவே, இது மிகவும் முக்கியமான விஷயமாகும். முழு அமைப்பிற்கும் இது குறித்து மிகவும் கவலைப்படுவது அவசியமாகும்.

லஜ்னா இமாயில்லாஹ்வும் இவ்விஷயத்தில் தமது பங்கை ஆற்ற வேண்டும். சிறுவர்களின் தொழுகைகளை வீடுகளில் கண்காணித்து வருதல், அவர்களிடம் தொழுகையில் பழக்கத்தை ஏற்படுத்துவது ஆண்கள் மற்றும் இளைஞர்களை பள்ளிவாயிலுக்குச் செல்வதற்காக தொடர்ந்து கவனமூட்டிக் கொண்டேயிருத்தல் ஆகியவை பெண்களின் பணியாகும். ஆனால் பெண்கள் தமது பங்கை ஆற்றினால் ஓர் அசாதாரண மாற்றம் ஏற்பட முடியும். இதுபோன்று இங்கு எத்தகைய ஒரு சிலரை நான் சீர்படுத்த விரும்புகிறேன் என்றால் அவர்கள் கூறுகிறார்கள்: எங்களிடம் தொழுகைகளைப் பற்றி கூறாதீர்கள்; கேட்கவும் செய்யாதீர்கள். ஏனெனில், இது எமக்கும் இறைவனுக்கும் இடையில் உள்ள விவகாரம் ஆகும். பல பெண்களிடமிருந்து இந்த புகார்கள் வருகின்றன. நாங்கள் எமது கணவருக்கு கவனமூட்டினால் சண்டையிடத் தொடங்கி விடுகின்றனர் என்கின்றனர். அத்தகையவர்களுக்கு நான் கூறுகிறேன். நிச்சயமாக இது அடியானுக்கும் இறைவனுக்கும் இடையில் உள்ள விவகாரம்தான். ஆனால் கவனமூட்டுவதும் கேட்பதும் ஜமாஅத் அமைப்பின் பணியாகும். அதேபோன்று மனைவியரின் பணியும் ஆகும். இன்னும் சொல்வதாயின் அவர்களின் கடமை ஆகும். விரும்பினால் தொழுவேன்; விரும்பா விட்டால் தொழ மாட்டேன் என்ற அளவுக்குள் அல்லது ஃபஜ்ர் நேரத்தில் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கிறோம். பகல் முழுவதும் சோர்ந்துபோய் இரவில் ஆழ்ந்த தூக்கம் வந்து விடுகிறது. எனவே, எம்மை எழுப்பக் கூடாது என்பது நமது விருப்பத்திற்குள் இருக்கும் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கணவருக்கும் மனைவிக்கும் இவ்வாறு அறிவுறுத்தியிருக்கவே மாட்டார்கள். தொழுகைக்காக எவர் முதலில் எழுந்தாரோ அவர் மற்றவரை எழுப்ப வேண்டும். எழாமல் சோம்பல் காட்டினால் தண்ணீர்த் துளிகளை முகத்தில் தெளியுங்கள். சில இடங்களில் அன்னார் மிகவும் கடுமையாக எச்சரித்துள்ளார்கள். எனவே, நாம் அத்தகைய விவகாரங்களில் சுதந்திரமானவர்கள் என்று நினைப்பது தவறாகும். அது நமக்கும் இறைவனுக்கும் உள்ள விவகாரம் என்று நினைப்பது தவறாகும். எந்த அமைப்புடன் உங்களை தொடர்புபடுத்தியுள்ளீர்களோ அது தமது ஜமாஅத்தை ஆய்வு செய்வதற்காக தொழுகை சம்பந்தமாக கேள்வி எழுப்பினால், சிடுசிடுத்துக் கோபம் காட்டுவதற்குப் பதிலாக ஒத்துழைக்க வேண்டும். ஆயினும் மனிதன் முதலில் தான் தொழுது பிறகு உலகிற்கு நான் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுகிறேன் என்று பெருமிதத்துடன் கூறிக் கொண்டு திரிந்தால் அது தவறாகும்.

இந்த கவனமூட்டலுக்குப் பிறகு தொழுகை தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய சில வழிகாட்டல்களை எடுத்து வைக்கிறேன். இவை பொதுவாக மார்க்கச் சட்ட விவகாரங்கள் தொடர்பானவையாகும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூற்றை ஏற்கிறோம். அன்னாரை நீதி நெறி தீர்ப்பவர் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளோம். அவ்வாறே அவர்கள் கூறியதன்படி செயல்படவும் வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களது சஹாபாவிடமிருந்து நிரூபணம் ஆகும் நிலையில் அத்தகையவற்றுள் ஒன்று கைகளை உயர்த்துவதாகும். அதாவது, தொழுகையின்

ஒவ்வொரு தக்பீரிலும் தக்பீர் உடைய ஒவ்வொரு அசைவுக்கும் கையை காது வரை உயர்த்தி காதுடன் வைப்பது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இந்த எல்லா சண்டைகளையும் தீர்ப்பதற்காக வந்தார்கள். எனவே, அன்னார் கூறினார்கள்: நான் நீதி நெறி தீர்ப்பவனாக வந்துள்ளேன். என்னை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி இதற்கான தீர்வையும் வழங்கினார்கள். அவர்களிடமிருந்த சிறிய வேறுபாடுகளை அவர்கள் அனுமதிக்கப்பட்டதாகவும் ஆக்கினார்கள். இப்படியும் செய்யலாம்; அப்படியும் செய்யலாம். இந்த வகையில் ரஃபஅ யதைன் (கைகளை உயர்த்துதல்) சம்பந்தமாக அன்னார் கூறினார்கள்: இதில் தவறு ஏதும் தெரியவில்லை. ஒருவர் செய்தாலும் சரி, செய்யா விட்டாலும் சரி ஹதீஸிலும் இது சம்பந்தமாக இரு தரப்பிலும் கூறப்பட்டுள்ளது. ஏனெனில் வஹ்ஹாபி மற்றும் சுன்னிகளின் நடைமுறையில் இருந்து இதுவே வெளிப்படுகிறது. ஏனெனில் ஒரு பிரிவினர் ரஃபவுல் யதைன் செய்கிறார்கள். ஒரு பிரிவினர் செய்வதில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஏதாவது ஒரு வேளையில் கைகளை உயர்த்தியுள்ளார்கள். பிறகு விட்டு விட்டார்கள் என்று தெரிகிறது. இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்ந்து செய்யவில்லை. இதனை சிலர் ஏற்றுள்ளார்கள் என்றால் அதில் சண்டையிடத் தேவையில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிகமாக செய்து காட்டியதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள்.

ஹாஃபிஸ் நூர் முஹம்மது சாஹிப் தெரிவித்தார்கள். ஒருமுறை நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் ஒரு மார்க்கக் கேள்வியைக் கேட்டோம். ஹுஸூர்! சூரா ஃபாத்திஹா இமாமுக்குப் பின் ஓதுவது, கைகளை உயர்த்துதல், சத்தமாக ஆமீன் சொல்லுதல் இதுபற்றி என்ன கட்டளையிடுகிறீர்கள்? ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்: இவை ஹதீஸ்களிலிருந்து நிரூபணம் ஆகியுள்ளன. கண்டிப்பாக இதன்படி செயல்பட வேண்டும். ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் இவ்விஷயத்தில் கூறுகின்றார்கள்: எளியவன் கூறுகிறேன். சூரா ஃபாத்திஹாவை இமாமுக்குப் பின் ஓதுதல் ஹஸ்ரத் சாஹிப் மூலமாக தொடர்ந்து நிரூபிக்கப்பட்டுள்ளது. இமாமுக்கு பின்னால் தொழுகை நடக்கும்போது சூரா ஃபாத்திஹா ஓத வேண்டும். ஆனால் கைகளை உயர்த்துதல், ஆமீன் சத்தமாகக் கூறுதல் பற்றி ஹஸ்ரத் சாஹிப் அவ்வாறு கூறியிருப்பார்கள் என்று நான் கருதவில்லை. ஏனெனில் ஹுஸூர் அவர்கள் அதனை அவசியமானதாகக் கருதினால், தாம் அதனை எப்போதும் செய்து வந்திருப்பார்கள். ஆனால், தொடர்ந்து ஹுஸூர் (அலை) அவர்கள் செய்து வந்ததாக நிரூபணமாகவில்லை. இன்னும் சொல்வதாயின், ஹுஸூர் (அலை) அவர்களுடைய பொதுவான செயல் அதற்கு எதிராக இருந்தது.

மிர்ஸா பஷீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: ஹாஃபிஸ் சாஹிப், ஹுஸூரிடம் கேட்ட போது அதில் பல விஷயங்களைக் குறித்து கேட்டதால் ஹுஸூர் அதில் முதல் விஷயத்தை கவனத்தில் கொண்டு, சூரா ஃபாத்திஹாவை இமாமுக்குப் பின்னாலும் ஓத வேண்டும் என்பது அன்னார் கூறிய பதிலின் நோக்கமாக இருந்தது. அல்லாஹ்வே நன்கறிந்தவன். பிறகு இதனை உண்மைப்படுத்தும் விதத்தில் ஒரு அறிவிப்பும் உள்ளது. சூரா ஃபாத்திஹா ஓதுவது சரிதான். மற்ற விஷயங்கள் இல்லை.

அப்துல்லாஹ் சாஹிப் சனோரி கூறினார்கள். ஆரம்ப காலத்தில் நான் கடுமையான கைர் முகல்லித் (மத்ஹபுகளை பின்பற்றாதவர்) ஆக இருந்தேன். கைகளை உயர்த்துவது, ஆமீன் – ஐ சத்தமாகக் கூறுவது இவற்றை மிகவும் பேணி வந்தேன். ஹஸ்ரத் சாஹிபை சந்தித்த பிறகும் கூட நான் ஒரு காலம் வரை இந்த வழக்கத்தை தொடர்ந்து வந்தேன். ஒரு காலத்திற்குப் பிறகு அன்னாருக்குப் பின்னால் நான் தொழுத போது தொழுகைக்கப் பிறகு அன்னார் என்னிடம் புன்சிரித்தவாறு கூறினார்கள். மியான் அப்துல்லாஹ் இந்த சுன்னத்தின்படி அதிகமாக செயல்பட்டு விட்டோம். கைகளை உயர்த்துதல் குறித்து அன்னார் சுட்டிக்காட்டியிருந்தார்கள். மியான் அப்துல்லாஹ் சாஹிப் கூறுகின்றார்கள்: அந்த நாளிலிருந்து நான் கைகளை உயர்த்துவதை விட்டு விட்டேன். ஆமீன் –ஐ சத்தமாகக் கூறுவதையும் விட்டு விட்டேன். மியான் அப்துல்லாஹ் சாஹிப் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் சாஹிப், கைகளை உயர்த்துவதையோ ஆமீனை சத்தமாக கூறுவதையோ நான் ஒருபோதும் பார்த்ததில்லை அல்லது பிஸ்மில்லாஹ்வை சத்தமாக ஓதவும் கேட்டதில்லை.

பிறகு கூறுகின்றார்கள்: சிலர் பிஸ்மில்லாஹ்வை சத்தமாக ஓதுகிறார்கள். சிலர் அவ்வாறு ஓதுவதில்லை. ஹஸ்ரத் சாஹிப் கூறினார்கள்: இவை அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் நிரூபிக்கப்பட்டவையாகும். எந்த முறையின்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிகமாக அமல் செய்தார்களோ அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள். பிறகு ஒரு கேள்வி வருகிறது. தொழுகையில் மனிதன் கை கட்டி நிற்கிறார். கியாமில் அவர் கைகளை எங்கு கட்ட வேண்டும்? சிலர் தொப்புளுக்கு கீழ் கை கட்டுகிறார்கள். சிலர் நடுவிலும், சிலர் மிகவும் உயர்த்தியும் வைக்கிறார்கள் இதுபற்றி முதல் கலீஃபாவிடம் ஒரு கடிதம் வந்தது. தொழுகையில் கையை தொப்புளின் மேல் கட்டுவதற்கு ஏதாவது நம்பத்தகுந்த ஹதீஸ் உள்ளதா? என்று கேட்கப்பட்டிருந்தது. முதல் கலீஃபா அவர்கள் அந்த கடிதத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் எடுத்து வைத்துக் கூறினார்கள். இது சம்பந்தமாக கிடைக்கிற ஹதீஸ்கள் எதுவும் சர்ச்சைக்குரியவையாக உள்ளன. சர்ச்சை இருக்கிறது. சிலர் அந்த ஹதீஸ்களை சரி என்கிறார். சிலர் தவறு என்கிறார். உடனே ஹஸ்ரத் சாஹிப் கூறினார்கள்: மவ்லவி சாஹிப், தேடுங்கள்; கண்டிப்பாக கிடைக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தனது கருத்தைக் கூறுகிறார்கள்: ஏனெனில் எம்மைச் சுற்றி அனைவரும் ஹனஃபிகளாக இருந்த போதிலும் எனக்கு தொப்புளின் கீழ் கையைக் கட்டுவது பிடித்தமானதாக இருக்கவில்லை. மாறாக, தொப்புளுக்கு மேற்பகுதியில் கையைக் கட்டுமாறுதான் எனது இயல்பு விரும்புகிறது. நாம் பலமுறை அனுபவப்பட்டுள்ளோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நாம் பலமுறை அனுபவப்பட்டுள்ளோம். எந்த விஷயத்தின் பக்கம் நமது இயல்பு சார்ந்துள்ளதோ அதனை ஹதீஸில் தேடும்போது கண்டிப்பாக கிடைக்கிறது. அதுபற்றி அதற்கு முன்னர் நமக்கு தெரியாவிட்டாலும் சரியே. அன்னார் முதல் கலீஃபாவிடம் கூறினார்கள். எனவே, தேடுங்கள். கண்டிப்பாக கிடைக்கும். எனது இயல்பு எப்பக்கம் உள்ளதோ கண்டிப்பாக அது ஹதீஸில் காணப்படுகிறது. மவ்லவி சர்வர் ஷா சாஹிப் உடனே ஹஸ்ரத் சாஹிபிடம் சென்றார்கள். அரை மணி நேரம் கூட ஆகியிருக்காது. மகிழ்ச்சியுடன்

ஒரு நூலை கையில் எடுத்துக் கொண்டு வந்தார்கள். ஹுஸூர் ஹதீஸ் கிடைத்து விட்டது. ஹதீஸும் எத்தகையது என்றால் ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர் இருவரும் ஒப்புக் கொள்கின்றனர். இதில் எந்தப் பங்கமும் இல்லை. எந்த மாற்றுக் கருத்துடைய சர்ச்சைகளும் இல்லை. பிறகு கூறினார்கள்: ஹுஸூர் (அலை) அவர்களுடைய வழிகாட்டலின் பரக்கத் ஆகும். அதாவது, தொப்புளுக்கும் மேல் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிகமாக தொழுகையில் கையைக் கட்டியிருந்ததாக ஹதீஸ் கிடைத்திருந்தது.

பிறகு ஒரு மனிதர் அத்தஹிய்யாத்தில் ஷஹாதத் விரலை ஏன் உயர்த்த வேண்டும்? என்று கேள்வி கேட்டார். அன்னார் கூறினார்கள்: அறியாமைக் காலத்தில் மக்கள் ஏசுவதற்காக விரலை உயர்த்தினார்கள். எனவே, இதற்கு ஷபாபா அதாவது ஏசுவதற்கான விரல் என்று அழைக்கப்பட்டது. இறைவன் அரபுகளை சீர்திருத்தினான். ஒருமைப்பாட்டை கூறும்போது அவனுக்கு இணையில்லை என்று கூறும்போது விரலை உயர்த்துங்கள். அது ஷஹாதத்தின் விரலாக ஆக வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தான். அதேபோன்று அரபு மக்கள் ஐவேளை மது அருந்தினர். அதற்குப் பதிலாக ஐவேளை தொழுகை வைக்கப்பட்டது. லூதியானாவைச் சார்ந்த மவ்லவி அப்துல் காதிர் சாஹிப், ருகூ ஸுஜுதில் திருக்குர்ஆனின் வசனங்களை ஓதுவது எப்படி? என்று கேள்வி கேட்டார்கள். அன்னார் கூறினார்கள்: ஸஜ்தா மற்றும் ருகூ மிகவும் பணிவான நேரமாகும். தாழ்மையின் நேரமாகும். அல்லாஹ்வின் வார்த்தைகள் மகத்துவத்தை விரும்புகின்றது. இது தவிர ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ருகூ அல்லது ஸுஜுதில் ஏதாவது திருக்குர்ஆனின் துஆவை படித்ததாக ஹதீஸ்களிலிருந்து நிரூபணமாகவில்லை. ஒருமுறை ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: தொழுகையில் அதிகமாக துஆ செய்ய வேண்டும். நமது மொழியில் துஆ செய்ய வேண்டும். ஆனால் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களிடமிருந்து நிரூபிக்கப்பட்டவற்றை அதே வார்த்தைகளிலேயே படிக்க வேண்டும். உதாரணமாக, ருகூவில் சுப்ஹான ரப்பியல் அளீம் மற்றும் ஸஜ்தாவில் சுப்ஹான ரப்பியல் அஃலா போன்றவற்றை ஓதி விட்டு சந்தேகமின்றி தமது மொழியில் துஆ செய்யலாம். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் ஒருவர் கேட்டார். ஸஜ்தாவில் திருக்குர்ஆனின் துஆவை ஓதுவது ஏன் அனுமதிக்கப்படாததாக உள்ளது? ஸஜ்தாவோ மிகவும் பணிவின் இடமாக உள்ளது. மிகவும் பணிவின் இடமாக இருப்பதால் ஒப்புக் கொள்ளப்படுவதற்காக அதில்தான் ஓத வேண்டும்.

அன்னார் அதற்கு பதிலளித்தவாறு கூறினார்கள்: எனது கொள்கையும் அவ்வாறுதான் இருந்தது. ருகூ ஸஜ்தாவில் குர்ஆனிய துஆக்களை ஓதுவது அனுமதிக்கப்பட்டதாகவே இருக்கும் என்று இருந்தது. ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஸஜ்தாவின் நிலையில் குர்ஆனிய துஆவை ஓதுவதை அன்னார் அனுமதிக்கப்படாதது என்று கூறிய ஒரு மேற்கோள் கிடைத்தது. அதுபோன்று ஹதீஸில் முஸ்னது அஹ்மது பின் ஹம்பலிலும் இதே கருத்தமைந்த ஒரு ஹதீஸும் கிடைத்து விட்டது. எனது கொள்கைக்கு எதிராக இந்த கருத்து கிடைக்கா விட்டாலும் கூட ஸஜ்தாவின் நிலை பணிவினைக் காட்டும் இடமாக இருக்கிறது. அதில்தான் குர்ஆனிய துஆவை ஓத வேண்டும்? எனெனில் ஸஜ்தா மிகவும் பணிவின் இடமல்லவா? அதில் ஓதுவதற்கு தான் அனுமதி தரப்பட்டிருக்க வேண்டும்? என்ற கேள்வி அறிவுப்பூர்வமானதாகது. அதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

அன்னார் மேலும் விளக்கியவாறு கூறுகிறார்கள்: இமாம் மாலிக் (ரஹ்) உடைய கருத்து என்னவென்றால், கடலின் ஒவ்வொரு பொருளும் ஹலால்தான். ஒருமுறை ஒரு மனிதர் அவர்களிடம் வந்தார். கடலில் பன்றியும் இருக்கிறது. அதனை உண்பதும் ஹலாலா? இமாம் மாலிக் கூறினார்கள்: கடலின் ஒவ்வொரு பொருளும் ஹலால்தான். ஆனால், பன்றி ஹராம் ஆகும். அவர் மீண்டும் மீண்டும் இந்தக் கேள்வியைக் கேட்டார். ஆனால் அன்னார், இந்தக் கேள்விக்கு நான் இந்த பதிலைத்தான் தர முடியும். கடலின் ஒவ்வொரு பொருளும் ஹலாம் ஆகும். ஆனால் பன்றி ஹராம் ஆகும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இதே பதிலைத்தான் நானும் தருகிறேன். ஸஜ்தா நிச்சயமாக பணிவின் இடம்தான். ஆனால் திருக்குர்ஆனின் துஆக்ளை ஸஜ்தாவில் ஓதக் கூடாது. துஆ மனிதனை கீழ் நோக்கி இழுக்கிறது. திருக்குர்ஆன் மனிதனை மேல் நோக்கி எடுத்துச் செல்கிறது. எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக ஒரு கருத்து கிடைத்து விட்டால் அதற்கு எதிரான விஷயத்தை கடைபிடிப்பது சரியல்ல. நமது அறிவுக்கு அது புலப்படா விட்டாலும் சரியே. நாம் அந்தக் கட்டளையை செயல்படுத்த வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நமது கொள்கை என்னவென்றால் லா ஸலாத்த இல்லா பி ஃபாத்திஹத்தில் கிதாப் – சூரா ஃபாத்திஹா இல்லாமல் தொழுகை இல்லை. மனிதன் இமாமுக்கு பின்னால் இருந்தாலும் தனியாக தொழுதாலும் எந்நிலையிலும் மனிதன் சூரா ஃபாத்திஹா ஓத வேண்டும். நிறுத்தி நிறுத்தி ஓத வேண்டும். பின்னால் தொழுபவரும் கேட்கவும் வேண்டும். ஓதவும் வேண்டும். இங்கு இமாமுக்கு வழிகாட்டல் வழங்குகிறார்கள். ஒவ்வொரு வசனத்திலும் பின்னால் நிற்பவரும் ஓதும் அளவுக்கு இமாம் நிறுத்தி ஓத வேண்டும். எவ்வாறிருப்பினும், அவர் கேட்பதற்கும் ஓதுவதற்கும் பின்னால் நிற்பவருக்கு வாய்ப்பு வழங்க வேண்டும். சூரா ஃபாத்திஹா ஓதுவது அவசியமாகும். ஏனெனில் அது உம்முல் கிதாப் ஆகும். எந்த மனிதர் முயற்சி செய்தும் தொழுகையில் ருகூவில் தான் சேர முடிந்தது என்றால் அதற்கு முன்பாக சேர முடியவில்லை என்றால் அவருக்கு அந்த ரக்அத் கிடைத்து விட்டது. அவர் அதில் சூரா ஃபாத்திஹா ஓதா விட்டாலும் சரியே. ஏனெனில் ஹதீஸ் ஷரீஃபில் வருகிறது. எவர் ருகூவை பெற்று விட்டாரோ அவருக்கு அந்த ரக்அத் கிடைத்து விட்டது. ஆனால், ஒருவர் முயற்சி செய்தும் தன் சார்பாக விரைவுபடுத்தியும் கூட ருகூவில்தான் வந்து சேர்ந்தார் என்றால், மார்க்கத்தின் அடிப்படை எளிமையிலும் மென்மையிலும் இருப்பதால் மார்க்கத்தில் எளிமையையும் மென்மையையும் கடைபிடிக்க வேண்டும் என்று இருப்பதால் ரஸூலே கரீம் (ஸல்)

அவர்கள் அம்மனிதரது அந்த ரக்அத் கிடைத்து விட்டது என்று கூறினார்கள். அது சூரா ஃபாத்திஹா பற்றியதல்ல. மாறாக, தாமதமாக வந்து சேர்ந்தால் அவர் சலுகையினைப் பயன்படுத்துகிறார்.

பிறகு இமாமுக்குப் பின்னால் சூரா ஃபாத்திஹா ஓத வேண்டும் என்பது குறித்து மிர்ஸா ஷேர் அலி சாஹிப் கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பின்னால் நிற்பவர்கள் கண்டிப்பாக சூரா ஃபாத்திஹா ஓதுவது அவசியமாகும் என்ற இவ்விஷயத்தில் மிகவும் கடுமையாக அழுத்தம் தெரிவித்தார்கள். சூரா ஃபாத்திஹா ஓதாதவர்களின் தொழுகைகள் சேராது என்று கூறவுமில்லை. ஏனெனில் நிறைய சான்றோர்களும் அல்லாஹ்வின் அவ்லியா சென்று போயுள்ளார்கள். அவர்கள் சூரா ஃபாத்திஹாவை ஓதுவதை அவசியம் என்று கருதியிருக்கவில்லை. அவர்களின் தொழுகை அனைத்தையும் நான் வீணானதாகக் கருதவில்லை. ஹனஃபிகளின் கொள்கையின்படி பின்னால் நிற்பவர் அமைதியாக நின்று இமாமின் திலாவத்தை கேட்க வேண்டும். தானே எதுவும் ஓதக் கூடாது. அஹ்லே ஹதீஸின் கொள்கை என்னவென்றால் சூரா ஃபாத்திஹாவை இமாமுக்குப் பின்னால் நிற்பவரும் ஓத வேண்டும். ஹஸ்ரத் சாஹிப் இந்த விவகாரத்தில் அஹ்லே ஹதீஸின் கருத்தை ஆதரிப்பவர்களாக இருந்தார்கள். ஆனால் இவ்வாறு அவர்களின் கொள்கை இருந்தபோதிலும் அன்னார் பிடிவாதமாக இருக்கவில்லை. அஹ்லே ஹதீஸ்களைப் போன்று சூரா ஃபாத்திஹா ஓதாதவரின் தொழுகை சேராது என்று கூறுவதில்லை.

ஒரு மனிதர் அல்ஹம்து இமாமுக்குப் பின்னால் ஓதா விட்டால் அவரது தொழுகை சேருமா? சேராதா? என்று கேட்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: அந்த தொழுகை சேருமா? சேராதா? என்று கேள்வி கேட்கக் கூடாது. மாறாக, இமாமுக்குப் பின்னால் அல்ஹம்து சூரா ஓத வேண்டுமா? வேண்டாமா? என்றுதான் கேட்க வேண்டும். நாம், கண்டிப்பாக ஓத வேண்டும் என்கிறோம். தொழுகை சேருமா? சேராதா? என்பது இறைவனுக்கு தான் தெரியும். ஹனஃபி ஓதுவதில்லை. ஆயிரக்கணக்கான அவ்லியா ஹனஃபி முறையைக் கடைபிடிப்பவர்களாக இருந்துள்ளனர். அவர்கள் இமாமுக்குப் பின்னால் அல்ஹம்து ஓதவில்லை. அவர்களின் தொழுகை சேராது என்றால் அவர்கள் அவ்லியாவுல்லாஹ்வாக எப்படி ஆனார்கள்? ஏனெனில் நாம் இமாமே அஃஸம் (ஹஸ்ரத் அபூஹனிஃபா) அவர்களை ஒரு பக்கம் இணங்கியும் உள்ளோம். அவர்களிடம் நமக்கு மிகுந்த மரியாதை உள்ளது. எனவே, தொழுகை சேராது என்று நாம் ஃபத்வா கொடுக்க இயலாது. அக்காலத்தில் எல்லா ஹதீஸ்களும் தொகுக்கப்பட்டிருக்கவில்லை. இப்போது திறக்கப்பட்ட இரகசியம் அப்போது திறக்கப்படவில்லை. இப்போது அப்பிரச்சனை தீர்ந்து விட்டது. எனவே, எவர் சூரா ஃபாத்திஹா ஓதுவதில்லையோ அவருடைய தொழுகை ஏற்கப்படும் தகுதிக்கு செல்லாது. நாம் இக்கேள்விக்குப் பதிலாக இதனையே மீண்டும் மீண்டும் கூறுவோம். அல்ஹம்துவை இமாமுக்குப் பின்னால் கண்டிப்பாக ஓத வேண்டும்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறக் கேட்டேன். இமாம் அஸ்ர் தொழுகையை நடத்துகிறார் என்றால் ளுஹர் தொழ வேண்டிய ஒரு மனிதர் வருகிறார் அல்லது இஷா தொழுகை நடைபெறும்போது மக்ரிப் தொழ வேண்டிய ஒருவர் வருகிறார் என்றால் அத்தகையவர் முதலில் ளுஹர் தொழுகையை தனியாக தொழ வேண்டும். பிறகு இமாமுடன் தொழ வேண்டும் அல்லது மக்ரிப் தொழுகையை தனியாக தொழுது விட்டு பிறகு இமாமுடன் சேர்ந்து கொள்ள வேண்டும். . ஒருமுறையல்ல. இருமுறை கேட்டுள்ளேன். எனக்கு நினைவு உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் மீண்டும் கேட்கப்பட்டபோது அன்னார் கூறினார்கள்: இது சம்பந்தமாக நான் தெளிவுபடுத்தி விட்டேன். தொழுகையின் வரிசைப்படுத்துவது அவசியமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழக்கம் தொடக்கத்திலிருந்தே இவ்வாறுதான் இருந்தது. சுன்னத்தையும் நஃபிலையும் வீட்டில் தொழுவார்கள். ஃபர்ள் தொழுகையை பள்ளிவாயிலில் ஜமாஅத்துடன் தொழுவார்கள். இந்த வழக்கம் அன்னாரின் கடைசி நேரம் வரை இருந்தது. ஒருவேளை ஃபர்ள் தொழுகைக்கு தாமதமாக மக்கள் பின்னால் வந்து சேர்ந்திருப்பதை அவர்கள் தமது தொழுகையை முடிக்கவில்லை என்பதையும், செல்வதற்கு வழியில்லை என்பதையும் பார்க்கும்போது அன்னார் சுன்னத் தொழுகைகளை பள்ளிவாயிலில் தொழுவார்கள் அல்லது சில வேளை அவ்வப்போது தொழுகைக்குப் பிறகு பள்ளிவாயிலேயே இருப்பார்கள். அப்போது பள்ளிவாயிலேயே சுன்னத்தை தொழுது கொள்வார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பொதுவான வழக்கம் பற்றி தெரியாத அக்காலத்தின் சில மாணவர்கள் தமது தவறினால் சுன்னத் தொழுகை முக்கியமில்லை என்று கருதி விட்டார்கள். ஏனெனில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முன் சுன்னத் தொழுவதையோ பின் சுன்னத் தொழுவதையோ அவர்கள் பார்த்ததில்லை.

ஒருமுறை ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் திருக்குர்ஆன் தர்ஸில் கூறினார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வழக்கம் என்னவென்றால் ஃபர்ள் தொழுகை முடிந்ததும் வீட்டிற்குச் சென்று சுன்னத் தொழுவார்கள். அவ்வாறுதான் நானும் தொழுகிறேன். அறியாத சிறுவர்கள் ஃபர்ள் தொழுதவுடன் உடனே பள்ளிவாயிலை விட்டு வெளியே போய் விடுகிறார்கள். அவர்கள் சுன்னத் தொழுவதில்லை என்று நாம் நினைக்கிறோம். இப்போதும் நான் அவ்வாறு நடப்பதைப் பார்க்கிறேன். நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வீட்டிற்குச் சென்றதும் முதலில் சுன்னத் தான் தொழுவார்கள். நானும் அதையே செய்கிறேன். முதல் கலீஃபத்துல் மஸீஹ் கேட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு செய்ததற்கு சாட்சியாக எவரும் இருக்கிறார்களா? அவர்கள் வீட்டிற்குச் சென்றதும் சுன்னத் தானே தொழுது வந்தார்கள்? என்று கேட்டார்கள்.ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அவர்கள் வழக்கம் போல் தர்ஸில் கலந்து கொண்டிருந்தார்கள். எழுந்து நின்று குரலை உயர்த்தியவாறு கூறினார்கள். அன்னார் பள்ளிவாயிலுக்குச் செல்லும் முன் வீட்டில் சுன்னத் தொழுவார்கள். வெளியே பள்ளிவாயிலுக்கு வந்து ஃபர்ள் தொழுது விட்டு வீட்டிற்கு வருவார்கள். வந்தவுடன் சுன்னத்

தொழ நிற்பார்கள். சுன்னத் தொழுது விட்டு தான் பிறகு வேலைகளைச் செய்வார்கள். சந்தேகமின்றி இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழக்கமாக இருந்தது.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மறுப்பவர்களும் பொய்ப்படுத்துபவர்களும் அவர்களை காஃபிர் என்று கூறுபவர்களும் ஆகியவர்கள் பின்னால் தொழுவது முற்றிலும் தவறும் ஹராமும் ஆகும் என்று கூறியவாறு விளக்குகிறார்கள்: மறுத்தும் பொய்ப்படுத்தும் வழியைக் கடைபிடிக்கிறார் என்றால் அவர்கள் அழிந்துபோன சமுதாயங்கள் ஆவர். எனது ஜமாஅத்தை சார்ந்தவர்கள் அவருக்கு பின்னால் நின்று தொழும் அளவிற்கு, அவர்கள் தகுதியானவர்கள் அல்ல. உயிருள்ளவர் இறந்தவரின் பின் நின்று தொழ முடியுமா? எனவே நினைவில் கொள்ளுங்கள். இறைவன் எனக்கு அறிவித்தான். நீங்கள் மறுப்பவர் பொய்ப்படுத்துவர், விலகியவர் பின்னால் தொழுவது உங்களுக்கு ஹராமாகும் தெளிவான ஹராமாகும். மாறாக உங்களைச் சார்ந்தவரே உங்களுக்கு இமாமாக இருக்க வேண்டும். பிறகு புகாரியின் ஒரு ஹதீஸில் ஒரு கோணத்தில் இதன் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இமாமுக்கும் மின்கும் – உங்களிலிருந்தே உங்களுக்கு இமாமாக இருப்பார். பிறகு மற்றவர் பின் தொழுவது ஏன் அனுமதிக்கப்படவில்லை. என்ன காரணம்? ஒரு கேட்டார். ஒருவர் தங்களுடைய சீடராக இல்லையோ அவர்களின் பின்னால் தொழுவதை நீங்கள் ஏன் மக்களுக்கு தடுத்துள்ளீர்கள்? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: எவர்கள் அவசரப்பட்டு தவறான எண்ணம் கொண்டு அல்லாஹ் நிலைநாட்டிய இந்த இயக்கத்தை மறுத்து விட்டார்களோ அந்த அளவுக்கு வந்த அடையாளங்களையும் பொருட்படுத்தவில்லை. இஸ்லாம் மீது வந்துள்ள தொல்லைகளை அலட்சியம் செய்கிறார்கள். இத்தகையோர் தக்வாவை பயன்படுத்தவில்லை. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: இன்னமா யதகப்பலுல்லாஹி மினல் முத்தகீன – இறைவன் முத்தகி ஆனவர்களின் தொழுகையை மட்டும் ஏற்றுக் கொள்கிறான். இதனால் தான் அத்தகையோர் பின்னால் தொழாதீர்கள் என்று கூறப்பட்டது. அவர்களின் தொழுகையோ ஏற்கும் தகுதி வரை செல்லக் கூடியதாக இல்லை.

இருவர் பைஅத் செய்தனர். ஒருவர் மற்றவருடன் தொழுவது அனுமதிக்கப்பட்டதா? இல்லையா? என்று கேட்டார். அன்னார் கூறினார்கள்: அவர்கள் நம்மை காஃபிர் என்று கூறுகிறார்கள். நாம் காஃபிராக இல்லாத போது அந்த குஃப்ர் அவர்களிடமே திரும்புகிறது. முஸ்லிமைப் பார்த்து காஃபிர் என்று கூறுபவர் தானே காஃபிர் ஆகி விடுகிறார். இதன் காரணமாக அத்தகையோர் பின்னால் தொழுகை அனுமதியில்லை. பிறகு அத்தகையவர் நடுவில் எவர்கள் மவுனமாக இருக்கிறார்களோ எதுவுமே பேசுவதில்லையோ அவர்களும் அவர்களுடனேயே சேருவர். அவர்கள் பின்னாலும் தொழுகை அனுமதியில்லை. ஏனெனில் எவர்கள் தமது உள்ளத்தில் எதிர்ப்பான சில கொள்கைகளை வைத்திருக்கிறார்களோ அவர்கள் நம்முடன் வெளிப்படையாக இணைவதில்லை. அவர்கள் உள்ளத்தில் விலகலும் எதிர்ப்பும் உடைய கொள்கை உள்ளது.

இறுதியில் நான், அல்ஜஸாயிரைச் சார்ந்த அஹ்மதிகளுக்காக துஆவுக்காக கூற விரும்புகிறேன். இவர்கள் புதிய ஜமாஅத் ஆவர். பெரும்பாலோர் புதிதாக பைஅத் செய்தவர்கள் ஆவர். ஆனால் மிகவும் உறுதியான ஈமான் கொண்டவர்கள். தற்போது அரசு சார்பாக இவர்களிடம் கருணை காட்டப்படுகிறது. காரணமின்றி வழக்கு போடப்படுகிறது. சிலரை சிறையிலும் அடைத்துள்ளனர். இவர்கள் தாயிஷ் தீவிரவாதிகள் போன்றவர்கள் என்று பழிசுமத்தப்பட்டுள்ளது. நவூதுபில்லை. ஆனால் இப்போது எந்த நாட்டிலும் அமைதியை விரும்பக் கூடிய நாட்டின் சட்டத்தை பேணக் கூடியவர்கள் இருக்கிறார்கள் என்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத்தினர் மட்டுமே ஆவர். நம்மீது ஏதாவது குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காக இவ்வாறு திட்டம் தீட்டப்படுகிறது. போலீஸ்கள் சில வீடுகளில் நுழைந்து சில பெண்களை பர்தாவை அகற்ற முயன்றது. சில நாட்களுக்கு முன் ஒரு பெண்ணிடம் துப்பட்டாவை கழற்றுமாறு கூறினர். அப்பெண் கூறினார். உயிரை வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் துப்பட்டாவை கழற்ற முடியாது. அஹ்மதிய்யா ஜமாஅத்தை விடவும் முடியாது. நீதிபதியும் கூட நீதிக்கு மாறு செய்கின்றனர். இன்னும் சொல்வதென்றால், உச்சநிலையை தொட்டு விட்டனர்.

ஓர் அஹ்மதி கூறினார்: ஒரு முஸ்லிம் நீதிபதி அஹ்மதிய்யத்தை மறுத்து விடு; உன்னை விட்டு விடுகிறேன் என்றார். அந்த அஹ்மதி நான் இறந்து விடுவேன். ஆனால் அஹ்மதிய்யத்தை விடமாட்டேன். எனது ஈமானை விடமாட்டேன். இதுவே சரியான இஸ்லாம் என்று எனக்கு தெரிய வந்துள்ளது என்றார். உடனே அந்த நீதிபதி அப்படியா? நீர் அவ்வாறு கூறினால் நான் உம்மை வாழ்நாள் முழுவதும் சிறையில் வைப்பேன். சிறையிலேயே மரணிப்பீர். சரி; நீர் என்ன செய்ய வேண்டுமோ செய்து கொள்ளுங்கள் என்று அந்த அஹ்மதி கூறினார்.

இந்த நிலை அங்கு நிலவுகிறது. அல்லாஹ் அங்கு அஹ்மதிகளக்கு எளிதை உருவாக்குவானாக! உறுதியான பாதத்தை வழங்குவானாக! இந்த அஹ்மதிய எதிரிகளின் விஷமச் செயல்களை அவர்கள் மீதே திருப்புவானாக! அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் இந்த அநீதியாளர்களிடமிருந்து தனது அடைக்கலத்தில் வைப்பானாக!

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
on 27.01.2017 at Baitul Futuh London
Translated by Muallim M. Nizamuddeen
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516